**செய்தி வெளியீடு எண்:752** **நாள்: 13.12.12**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, பொது விநியோக திட்ட கிடங்குளிலும், நியாயவிலை அங்காடிகளிலும், விலையில்லா அரிசி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தேவையான அளவு கையிருப்பில் உள்ளதை உறுதி செய்யும் பொருட்டு இன்று 13.12.2012 மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர். காமராஜ் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை வடக்கு மண்டலத்திலுள்ள, அண்ணாநகர் பொது விநியோக திட்ட கிடங்கில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதையும், நியாயவிலை அங்காடிகளுக்கு குடிமைப்பொருள் வழங்கல் துறை ஆணையாளரின் மாதாந்திர ஒதுக்கீடு உத்தரவின்படி அத்தியாவசியப் பொருட்கள் அவ்வப்போது நகர்வு செய்யப்படுவதையும், தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் மூலமாக கண்டறிந்தார். இக்கிடங்கிலிருந்து 247 கூட்டுறவு நியாயவிலை அங்காடிகளுக்கும், 93 அமுதம் நியாயவிலை அங்காடிகளுக்கும் 3,77,689 குடும்ப அட்டைகளுக்கும் தேவையான விலையில்லா அரிசி, சர்க்கரை,

கோதுமை ஆகிய பொருட்கள் பொதுவிநியோகத் திட்டத்தின் மூலமும், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியன சிறப்பு பொது விநியோக திட்டத்தின் மூலமும் ஒவ்வொரு மாதமும் விநியோகம் செய்யப்படுகின்றன.

நடப்பு டிசம்பர்2012 மாதத்திற்கான பொது விநியோகத் திட்ட தேவைக்கு மாநிலம் முழுவதற்கும் குடிமைப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் வழங்கிய ஒதுக்கீட்டின்படி, கிடங்கிலிருந்து அங்காடிகளுக்கு முன்நகர்வு 25.11.2012 –ல் ஆரம்பித்து 20.12.2012–க்குள் முடிக்கப்பட வேண்டும். இதன்படி 11.12.2012 வரை 3,34,000 மெ.டன் அரிசி ஒதுக்கீட்டில் 2,34,724 மெ.டன் (71%) அரிசி அங்காடிகளுக்கு இயக்கம் செய்யப்பட்டுள்ளது. கையிருப்பில் 4.07 இலட்சம் மெ.டன்(3.75 இலட்சம் மெ.டன்புழுங்கலரிசி, 31,538 மெ.டன். பச்சரிசி) இருப்பு உள்ளது. 13,915 மெ.டன் துவரம்பருப்பில் 8,161 மெ.டன்னும் (60%) 10,430 மெ.டன் உளுத்தம்பருப்பில் 12,141மெ.டன்னும் (120%), 1.72 கோடி செறிவூட்டப்பட்ட பாமாயில் பாக்கெட்டுகள் ஒதுக்கீட்டில் 99 இலட்சத்து 77 ஆயிரம் பாக்கெட்டுகள் (58%) கொள்முதல் செய்யப்பட்டு

கிடங்குகளுக்கு இயக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 29 ஆயிரத்து 200 மெ.டன்(3 கோடியே 21 இலட்சத்து 20 ஆயிரம் பாக்கெட்டுகள்) பாமாயில் நான்கு கப்பல்களில் 14.12.2012 முதல் 31.12.2012–க்குள் சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்து சேரும்.

அனைத்து நியாயவிலை அங்காடிகளுக்கும் மாதாந்திர ஒதுக்கீட்டின்படி 20.12.2012–க்குள் அத்தியாவசியப் பொருட்கள் நகர்வு செய்யப்பட்டு மாத இறுதிவரை குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் அங்காடிகளில், விநியோகம் செய்யப்படும் என்றும் டிசம்பர்–2012 பொது விநியோக திட்டம் மற்றும் பொங்கல் பண்டிகைக்கான பச்சரிசி, சர்க்கரை,பருப்பு வகைகள், பாமாயில் ஆகிய அனைத்தும் கிடங்குகளுக்கு முன்னதாக நகர்வு செய்யப்பட்டு அங்காடிகளில் போதுமான இருப்பு வைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கிடங்கில் இருப்பிலுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் பூச்சித் தாக்கத்தினால் சேதமடைவதை தடுக்கும் வகையில் அனைத்து தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகளும் தொய்வின்றி எடுக்கப்பட வேண்டும். மேலும் கிடங்குகளில் பெறப்படும் இந்திய உணவுக் கழக புழுங்கல் அரிசி, பச்சரிசி ஆகியனவும், வெளிச்சந்தையில் டெண்டர் மூலம் கொள்முதல் செய்யப்படும் பருப்பு வகைகள் லாரிகளிலிருந்து இறக்கப்படும் பொழுதே அரசு நிர்ணயித்துள்ள தரக்கட்டுப்பாடு விழுக்காடுகளுக்குள் உள்ளதா என்று உறுதி செய்த பின்னரே இவை கிடங்கில் இறக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பத விழுக்காடுகளுக்கு மேலாக பொருட்கள் பெறப்பட்டால் அவற்றை கிடங்கில், இறக்காமல் சம்பந்தப்பட்ட தரக்கட்டுப்பாடு அலுவலர்களுக்கும், முதுநிலை மண்டல மேலாளருக்கும் தகவல் தெரிவித்து தக்க மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், தரமற்ற அத்தியாவசியப் பொருட்கள் கிடங்குகளில் பெறப்பட்டாலோ அல்லது நியாயவிலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டாலோ சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், இப்பகுதியில் உள்ள அமுதம் நியாயவிலை அங்காடிகள் எண்.FA022,FA19 மற்றும் மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை நிலையம் ஆகியவற்றை மாண்புமிகு அமைச்சர் ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உன்னத திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி தரமானதாகவும், எடைகுறைவின்றியும் வழங்கப்படுகின்றதா என்று அங்காடியில் கூடியிருந்த குடும்ப அட்டைதாரர்களிடம் கேட்டறிந்தார். குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் தங்களுக்கு அனைத்து அத்தியாவசியப்பொருட்களும் அனைத்து மாதங்களிலும் விடுதலின்றி வழங்கப்படுவதாகவும், பொருட்கள் தரமானதாகவும், எடைகுறைவின்றியும் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தனர். கிடங்குகளிலிருந்து அங்காடிகளில் பெறப்படும் அத்தியாவசியப் பொருட்களில் ஏதாவது தரக்குறைவு, காணப்பட்டால் அவற்றை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யாமல் கிடங்குகளுக்கே திரும்ப அனுப்பி தரமான பொருட்களை பெற்று விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று அங்காடி ஊழியர்கள் அறிவுறுத்தப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

அண்ணாநகர் கிடங்கில் இருந்து டிசம்பர்–2012 மாதத்திற்கு 10 ஆயிரம் லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 8,500 லிட்டர் இன்று வரை எடுக்கப்பட்டு அங்காடிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள 1,500 லிட்டர் மண்ணெண்ணெய் 20.12.2012–க்குள் எடுத்து விநியோகம் செய்யப்படும். மத்திய அரசு பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கும் மண்ணெண்ணெய்யின் மாதாந்திர ஒதுக்கீட்டின் அளவு, கடந்த 2011 ஏப்ரல் மாதத்தில் 52,806 கி.லிட்டராக இருந்தது. ஆனால் நடப்பு ஆண்டு 2012 ஏப்ரல் மாதத்தில் இருந்து மத்திய அரசு அதை 39,429 கி.லிட்டராக குறைத்துவிட்டது.
நமது மாநிலத்திற்கு தேவையான 65,140 கி.லிட்டர் மண்ணெண்ணெய்யை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு **புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தியும், அதனை ஏற்காத மத்திய அரசு 39ஆயிரத்து 429 கிலோ லிட்டர் மட்டுமே ஒவ்வொரு மாதமும் ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்தார். எனினும் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் முன்னுரிமை அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது என்றும் உணவு அமைச்சர் தெரிவித்தார். மாண்புமிகு முதலமைச்சர் **புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் செயல் திட்டங்களின் பயன்கள் முழுவதும் ஏழை எளிய மக்களை சென்றடைய கிடங்கு அலுவலர்கள் அனைவரும் அயராது பாடுபட வேண்டும் என மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது  அரசு செயலாளர் திருமதி. எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., குடிமை பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு.ப்பி.எம். பஷீர் அகமது, இ.ஆ.ப.,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப., சென்னை முதுநிலை மண்டல மேலாளர் திரு. பி.பாஸ்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**